பக்கங்கள்:-21

# காலை முரசு

முழக்கம்: 02 | வள்ளுவர் ஆண்டு 2055 | புரட்டாதி 31 | வியாழக்கிழமை | 17.10.2024 | அதிர்வு 76

வெளிநாட்டுக்கு அனுப்புவதாகக் கூறி

## யாழ். இளைஞர் ஒருவரிடம் 80 இலட்சம் ரூபா மோசடி!

சந்தேகநபர் விளக்கமறியலில்

(எஸ்.நிதர்ஷன்)

வெளிநாட்டுக்கு அனுப்புவதாகக் கூறி யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த இளைஞரிடம் 80 இலட்சம் ரூபாவை மோசடி

06




# சிவராம் கொலைக்கும் புளொட்டுக்கும் எந்தவிதமான தொடர்பும் இல்லையாம்

## ‘சங்கு’க்கு ஆதரவு வலுக்கின்றது என்ற அச்சத்தில் பொய்க் குற்றச்சாட்டு முன்வைப்பு என்கிறார் சித்தர்

(பிரபாகரன் டிலக்சன்)

“ஜனநாயகத் தமிழ்த் தேசியக் கூட்டணிக்கு மக்கள் மத்தியில் ஆதரவு பெறுகின்றது. அதனைப் பார்த்து அரசு உட்பட அனைவருமே பயமடைந்துதான் தராகி சிவராம் கொலை வழக்கையும் புளொட்டையும் தொடர்பு படுத்திப் பேசி வருகின்றார்கள். உண்மையில் தராகி சிவராம் கொலைக்கும் புளொட்டுக்கும் எந்தவிதத் தொடர்பும் இல்லை.”

- இவ்வாறு ஜனநாயகத் தமிழ்த் தேசியக் கூட்டணியின் பங்காளிக் கட்சியான புளொட்டின் தலைவரும் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினருமான தர்மலிங்கம் சித்தார்த்தன் தெரிவித்தார்.

06







சர்வதேச உறவுகளைக் கையாளும் விடயத்தில் இலங்கையின் புதிய ஜனாதிபதி அநுரகுமார திஸநாயக்கவின் அணுகுமுறை குறித்து தீவிர ஆய்வுகள், கணக்கெடுப்புகள் சர்வதேசத் தரப்புகளினால் முன்னெடுக்கப்பட்டு வருவதாகத் தெரிகிறது.

ஜனாதிபதியாவதற்கு முன்னர் அதிக அளவில் சீன பக்கம் சாய்ந்திருந்த அநுரகுமார திஸநாயக்க இப்போது தமது சர்வதேச நிலைப்பாடு குறித்து வெளிப்படையான தெளிவுபடுத்தல்களை பிரதிபலிக்காத சூழலில், அவர் எந்த நிலைப்பாட்டை எடுத்திருக்கிறார் என்பதை அறிவதில் – முடிவு செய்வதில் – இந்தியா, அமெரிக்கா உட்பட்ட சர்வதேச தரப்புகள் தீவிர கவனமாக இருக்கின்றன எனத் தெரிகிறது.

அவர் பதவியேற்ற பின்னர் சீனா சம்பந்தமான தன்னுடைய தொடர்புப்போக்கு குறித்து எந்த வெளிப்படுத்தலையும் முன் வைக்காமல் இருக்கின்றமை சர்வதேசத் தரப்புகளினால் அவரை எடை போட முடியாத நிலையை ஏற்படுத்தி இருக்கின்றது.

அவர் பதவியேற்ற பின்னர் உள்ளூரில் தூதுவர் மட்டத்துக்கு அப்பால் சீன உயர் அதிகாரிகள் யாரையும் அவர் சந்திக்கவில்லை. அல்லது தொடர்பாடல் கொண்டார் என்று தகவல் இல்லை.

இந்தியத் தரப்பில் வெளிவிகார அமைச்சர், தூதுவர் போன்ற பலரை அவர் சந்தித்து பேசி இருக்கிறார். அமெரிக்காவின் கடற்படையின் பசிபிக் பிராந்திய தளபதியோடு அவர் சந்தித்திருக்கிறார். ஆனால் சீனத் தரப்புடன் அவரது உயர்மட்ட தொடர்பாடல் எதுவும் வரவில்லை.

06



# யாழ்ப்பாணம் மாவட்ட வேட்பாளர்களுக்கும் பொலிஸாருக்கும் இடையில் கலந்துரையாடல்

## தேர்தல் கால வன்முறைகளைத் தடுக்கக் குழு அமைக்கத் தீர்மானம்

(பிரபாகரன் டிலக்சன்)

யாழ்ப்பாணம் தேர்தல் மாவட்டத்தில் நாடாளுமன்றத் தேர்தலில் போட்டியிடும் வேட்பாளர்களுக்கும் யாழ்ப்பாணம் பொலிஸாருக்கும் இடையில் கலந்துரையாடல் நடைபெற்றது. .

யாழ். பொலிஸ் நிலைய மாநாட்டு மண்டபத்தில் நேற்று புதன்கிழமை முற்பகல் 10 மணியளவில் யாழ். பிராந்திய சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் சூரிய பண்டார தலைமையில் இந்தக் கலந்துரையாடல் இடம்பெற்றது.

நாடாளுமன்றத் தேர்தல் காலங்களில் ஏற்படும் பிரச்சினைகள் மற்றும் வன்முறைகளைத் தடுக்கும் முகமாக குழு ஒன்று அமைக்க இதன்போது தீர்மானிக்கப்பட்டது.

யாழ். பிராந்திய சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் தலைமையில் கட்சிகள் மற்றும் சுயேச்சைக் குழுக்களின் உறுப்பினர்களை உள்ளடக்கிய 51 பேர் கொண்ட குழு அமைக்கப்படவுள்ளது.

இந்தக் குழுவில் தேர்தல் திணைக்கள அதிகாரிகள் மற்றும் பொலிஸ் சார்பில் 7 உறுப்பினர்களும், தேர்தல் மாவட்டத்தில் போட்டியிடும் கட்சிகள் மற்றும் சுயேச்சைக் குழுக்கள் சார்பில் 44 உறுப்பினர்களும் என மொத்தமாக 51 உறுப்பினர்களைக் கொண்ட குழு அமைக்கப்படவுள்ளது.

மேலும், தேர்தல் பிரசார இடங்களுக்கு அனுமதி கோரல், ஒலிபெருக்கி சாதனங்களைப் பயண்படுத்தும் கால அளவு தொடர்பிலும் இதன்போது ஆராயப்பட்டது.

இந்தக் கலந்துரையாடலில் யாழ். மாவட்ட மேலதிக அரச அதிபர் சிறீமோகன், பொலிஸ் உத்தியோகத்தர்கள், அரசியல் கட்சிகள் மற்றும் சுயேச்சைக் குழுக்களின் வேட்பாளர்கள் ஆகியோர் கலந்துகொண்டனர்.











# அரசின் பங்களிப்போடு அபிவிருத்தியை முன்னெடுக்க மக்கள் ஆணை வேண்டும்

## வன்னி மாவட்ட சுயேச்சைக் குழு வேட்பாளர் எமில்காந்தன் கோரிக்கை

(கி.வசந்தன்)

மாவட்டத்தின் அபிவிருத்தியை இங்குள்ள வளங்களைக் கொண்டு அரசின் பங்களிப்போடு முன்னெடுக்க மக்கள் ஆணை வழங்க வேண்டும் என நாடாளுமன்றத் தேர்தலில் வன்னித் தேர்தல் மாவட்டத்தில் போட்டியிடும் சுயேச்சைக் குழு 7 இன் முதன்மை வேட்பாளர் எமில்காந்தன் தெரிவித்தார்.

வவுனியாவில் நேற்றுப் புதன்கிழமை இடம்பெற்ற மக்கள் சந்திப்பின்போதே அவர் இவ்வாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

“ஒரு பிரதேசத்தின் அபிவிருத்தி என்பது அந்த மாவட்டத்தில் உள்ள வளங்களை இனங்கண்டு அவற்றைப் பயன்படுத்தி அந்த மாவட்ட மக்களுக்கான தொழில் வாய்ப்புகளை வழங்கி முன்னெடுக்கப்படுவது ஆகும். அவ்வாறானதொரு அபிவிருத்தி எமது மாவட்டத்தில் இதுவரை காலமும் முன்னெடுக்கப்படவில்லை. இதனால் எமது பிரதேச இளைஞர், யுவதிகள் பின்தங்கிய நிலையில் இருக்கின்றார்கள். இந்த நிலை மாற்றம் பெற வேண்டும். இதற்கு இந்தத் தேர்தலை வன்னி மக்கள் பயன்படுத்த வேண்டும். இதன் மூலம் அரசுடன் பேரம் பேசி அதனை இந்த மண்ணில் நடைமுறைப்படுத்த ஆணையை கோருகின்றோம்.

இதற்கு இவ்வாறான திட்டங்களை நடைமுறைப்படுத்தக் கூடியவர்கள் மக்கள் பிரதிநிதிகளாக வர வேண்டும். அவர்கள் துடிப்புள்ளவர்களாகவும், சிறந்த திட்டங்களைச் செயற்படுத்தக் கூடியவர்களாகவும், மொழித் தேர்ச்சி மிக்கவர்களாகவும் இருப்பதே எமது சமூகத்துக்கு நல்லது.

அவ்வாறானவர்களை எமது வன்னி மக்கள் இனங்கண்டு எமது மண்ணின் இளைஞர், யுவதிகளின் மாற்றத்துக்காக வன்னியின் குரலாக எமது கரங்களைப் பலப்படுத்தி அதற்கான ஆணையை வழங்க வேண்டும். எம் பின்னே திரண்டு வரும் மக்கள் அந்த ஆணையை வழங்குவார்கள் என நாம் நம்புகின்றோம்.” – என்றார்.

# மனித உரிமைகள் ஆணைக்குழுவின் பரிந்துரைக்கமைய புலமைப்பரிசில் விடைத்தாள் மதிப்பீடு ஆரம்பிக்கத் திட்டம்



சர்ச்சையை ஏற்படுத்தியுள்ள தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சை விடைத்தாள் மதிப்பீட்டுப் பணிகளை மனித உரிமைகள் ஆணைக்குழு வழங்கும் பரிந்துரைகளின் பின்னர் ஆரம்பிக்க திட்டமிட்டுள்ளதாக பரீட்சைகள் திணைக்களம் தெரிவித்துள்ளது.

விடைத்தாள் மதிப்பீட்டிற்கான அனைத்து நடவடிக்கைகளும் தயார்படுத்தப்பட்டுள்ளதாக பரீட்சைகள் ஆணையாளர் நாயகம் அமித் ஜயசுந்தர குறிப்பிட்டுள்ளார்.

தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சையின் முதலாம் வினாத்தாளின் சில கேள்விகள் கசிந்ததாகக் கூறப்படும் குற்றச்சாட்டு தொடர்பில் குற்றப்புலனாய்வுத் திணைக்களம் விசாரணைகளை ஆரம்பித்துள்ள நிலையில் இந்த தீர்மானம் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

இந்த நிலையில், தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சையின் புள்ளிகள் மற்றும் வெட்டுப்புள்ளிகளை வெளியிடுவதற்கு இடைக்காலத் தடை விதிக்குமாறு கோரி உயர் நீதிமன்றத்தில் நேற்று முன்தினம் அடிப்படை உரிமை மனு தாக்கல் செய்யப்பட்டமை குறிப்பிடத்தக்கது.




# புதிய முகங்களை நாடாளுமன்றத்துக்கு இந்த முறை மக்கள் அனுப்ப வேண்டும்!

## மாவீரர் போராளிகள் குடும்ப நலக் காப்பகம் கோரிக்கை

(எஸ்.நிதர்ஷன்)

வரும் நாடாளுமன்றத் தேர்தலில் பழைய அரசியல்வாதிகளை நிராகரித்து புதிய முகங்களை நாடாளுமன்றத்துக்கு அனுப்ப வேண்டும் என மாவீரர் போராளிகள் குடும்ப நலக் காப்பகம் கோரிக்கை விடுத்துள்ளது.

யாழ். ஊடக அமையத்தில் நேற்றுப் புதன்கிழமை நடைபெற்ற ஊடக சந்திப்பிலேயே இது தொடர்பில் அறிவிக்கப்பட்டுள்ளது.

மாவீரர் போராளிகள் குடும்ப நலக் காப்பகத்தினர் மேலும் தெரிவிக்கையில்,

"எதிர்வரும் நாடாளுமன்றத் தேர்தலில் பெயரளவுக்குப் புதிய முகங்கள் களமிறக்கப்பட்டுள்ளன. எனவே, குறித்த சூழ்ச்சிகரமான நடவடிக்கையை கண்டறிந்து வாக்காளர் பெருமக்கள் சரியான முறையில் சிந்தித்து பழைய அரசியல்வாதிகளைத் தோற்கடிக்க வேண்டும்.

கடந்த 15 வருடங்களாகவும் அதற்கு முன்னரும் இந்தப் பழைய அரசியல்வாதிகள் தமிழ் மக்களை விற்றுப் பிழைத்தார்களே தவிர மக்களுக்கு எதுவும் செய்யவில்லை. ஆகவே, எதிர்வரும் நாடாளுமன்றத் தேர்தலில் புதிய முகங்களைப் பொதுமக்கள் தெரிவு செய்ய வேண்டும்." - என்றனர்.



## சீரற்ற காலநிலை:

# 13 மாவட்டங்களில் 137,792 பேர் பாதிப்பு

குடா கங்கை, கிங் கங்கை மற்றும் நில்வள கங்கை ஆகியவற்றின் நீர் மட்டம் தொடர்ந்தும் அதிகரித்துக் காணப்படுவதாக நீர்ப்பாசனத் திணைக்களம் தெரிவித்துள்ளது.

அதேநேரம், ஆறு மாவட்டங்களுக்கு விடுக்கப்பட்ட முதலாம் நிலை மண்சரிவு அபாய முன்னெச்சரிக்கை தொடர்ந்தும் அமுலில் உள்ளது.

கொழும்பு, காலி, கம்பஹா, களுத்துறை, கேகாலை மற்றும் இரத்தினபுரி ஆகிய மாவட்டங்களுக்கே இவ்வாறு மண்சரிவு அபாய முன்னெச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

இதனிடையே, நாட்டில் நிலவும் சீரற்ற வானிலை காரணமாக 13 மாவட்டங்களைச் சேர்ந்த 137,792 பேர் பாதிக்கப்பட்டுள்ளனர்.

அத்துடன், 344 வீடுகள் பகுதியளவில் சேதமடைந்துள்ளதாக அனர்த்த முகாமைத்துவ நிலையம் தெரிவித்துள்ளது.

பாதிக்கப்பட்ட 2,222 குடும்பங்களைச் சேர்ந்த 9,591 பேர் 70 தற்காலிக முகாம்களில் பாதுகாப்பாகத் தங்க வைக்கப்பட்டுள்ளனர் என தெரிவிக்கப்படுகிறது.

# ‘சங்கு’ சின்னத்தைப் பயன்படுத்த எங்களுக்கு முழு உரித்து உண்டு!

## யாழ். மாவட்ட வேட்பாளர் சுரேன் குருசாமி தெரிவிப்பு



(எஸ்.நிதர்ஷன்)

“தமிழ் மக்கள் ஒன்றிணைந்து ஆதரவை வழங்கிய சங்கு சின்னத்தை நாங்கள் எடுத்தது நல்லதொரு விடயம். அதை நாங்கள் எடுப்பதற்கும் பாவிப்பதற்கும் எங்குக்கு அனைத்து உரிமைகளும் இருக்கின்றன.”

– இவ்வாறு ரெலோ அமைப்பின் ஊடகப் பேச்சாளரும் ஜனநாயகத் தமிழ்க் தேசியக் கூட்டணியின் வேட்பாளருமான சுரேன் குருசாமி தெரிவித்தார்.

யாழ்ப்பாணத்தில் நேற்று புதன்கிழமை நடத்திய ஊடக சந்திப்பின்போது அவர் மேலும் கூறுகையில்,

“நடைபெறவுள்ள நாடாளுமன்றத் தேர்தலில் பல்வேறு கட்சிகள் சுயேச்சைக் குழுக்கள், களமிறங்கி இருந்தாலும் தமிழ்த் தேசியத்துடன் பயணிக்கின்ற எமது கூட்டணிக்கு மக்கள் மத்தியில் ஆதரவு இருக்கின்றது. நாம் செல்லும் இடமெல்லாம் சங்குக்கு ஆதரவு பெருகி வருகின்றது.

தமிழ்த் தேசியம் பேசி தங்கள் கட்சியைத் தென்னிலங்கையில் அடகு வைத்தவர்கள் இப்போது சங்குக்கு எதிராகப் பிரசாரம் செய்கின்றார்கள். அதேபோன்றே வீட்டுச் சின்னத்தையும் தூக்கி கொண்டு ஓடிப் போனவர்கள் சங்குக்குப் பெருகி வருகின்ற ஆதரவைப் பார்த்து சங்குக்கு எதிராகக் கூக்குரல் இடுகின்றனர்.

ஏனெனில் ஒட்டுமொத்த மக்களும் விரும்புகின்ற அடிப்படையில் எமது கூட்டணிச் செயற்படுவதால் இந்தத் தேர்தலில் தங்களை நிராகரித்து விடுவார்கள் என்ற அச்சத்தில்தான் வெறுமனே சங்குக்கு எதிராகக் கடும் பிரசாரம் செய்கின்றனர்.

அரசியல் கட்சிகளும் சிவில் அமைப்புகளும் இணைந்து ஜனாதிபதித் தேர்தலில் எடுத்துக் கொண்ட சங்கு சின்னத்தைச் சட்ட ரீதியாக என்ன செய்ய வேண்டுமோ அந்த அடிபடையில்தான் இப்போது எமது கூட்டணிக்கு எடுத்திருக்கின்றோம். அதுவும் பெரும்பாலானவர்களின் ஆதரவுடன் – ஒத்துழைப்புடன் சட்ட ரீதியாகத்தான் பெற்றுள்ளோம். ஆனால், அதைக் கூட சிலர் தமது தேவைகளுக்காகப் பொய்களைக் கூறி வருகின்றனர். அதேபோலவே சில கட்சிகளும் தேல்விப் பயத்தில் பொய்ப் பிரசாரம் செய்கின்றனர்.

உண்மையில் அந்தச் சங்கு சின்னத்தை நாங்கள் எடுக்காவிட்டால் அது இன்னொருவருக்குச் சென்றிருக்கும். ஆனால், தமிழ் மக்கள் ஒன்றிணைந்து ஆதரவை வழங்கிய அந்தச் சின்னத்தை நாங்கள் எடுத்தது நல்லதொரு விடயம். அதை நாங்கள் எடுப்பதற்கும் பாவிப்பதற்கும் எங்குக்கு அனைத்து உரிமைகளும் இருக்கின்றன.

இதேவேளை, தெற்கில் ஏற்பட்ட மாற்றம் தமிழ் மக்களுக்கான மாற்றம் அல்ல என்பதனை அனைவரும் உணர்ந்து கொள்ள வேண்டியது அவசியம். குறிப்பாக அநுரவின் ஆட்சி என்பது கடந்த கால ஆட்சியாளர்களின் நிலைப்பாட்டைப் போலவேதான் உள்ளது என்பதை அவர்களே வெளிப்படுத்தி வருவதை அவதானிக்க வேண்டும்.

அவர்களின் பகிரங்க அறிவிப்புக்கள் என்ன என்பதை மக்கள் விளங்கிக்கொள்ள வேண்டும். அதனைவிடுத்து அந்தத் தரப்புகளோடு மட்டுமல்லாது தெற்கு கட்சிகளோடு பதவிகளுக்காகவும் சுய நலன்களுக்காகவும் நிற்பவர்களை மக்கள் அடையாளம் கண்டு தக்க பாடத்தைப் புகட்ட வேண்டும்.” – என்றார்.




# வாக்காளர்களின் செலவு வரையறை அடங்கிய வர்த்தமானி இன்று அச்சகத்திடம் கையளிப்பு

எதிர்வரும் நவம்பர் மாதம் 14 ஆம் திகதி இடம்பெறவுள்ள பொதுத் தேர்தலுக்காக வாக்காளர் ஒருவருக்குச் செலவிடக் கூடிய செலவு வரையறை அடங்கிய அதிவிஷேட வர்த்தமானி இன்று அரச அச்சகத்திற்குக் கையளிப்பதற்கான செயற்பாடுகள் முன்னெடுக்கப்பட்டுள்ளன என தேர்தல்கள் ஆணைக்குழு தெரிவித்துள்ளது.

இது தொடர்பிலான யோசனைகள் அரசியல் கட்சிகளின் செயலாளர்களிடம் இருந்து நேற்று முன்தினம் பெறப்பட்டதாக அந்த ஆணைக்குழுவின் பேச்சாளர் ஒருவர் தெரிவித்துள்ளார்.

இதன்படி, பெரும்பாலும் வாக்காளர் ஒருவருக்காக வேட்பாளர் ஒருவர் 109 ரூபாயை செலவிட முடியும் எனக் கட்சிகளின் செயலாளர்கள் தெரிவித்தனர் என அவர் குறிப்பிட்டுள்ளார்.

இதேவேளை, பொதுத் தேர்தலில் போட்டியிடும் வேட்பாளர்களின் விருப்பு இலக்கம் வெளியிடப்பட்டுள்ளது.

இதேவேளை, பொது தேர்தலுக்கான உத்தியோகப் பூர்வ வாக்காளர் அட்டைகள் எதிர்வரும் 26 ஆம் திகதி அஞ்சல் நிலையங்களுக்கு விநியோகிக்கப்படவுள்ளன.

அதேநேரம் இந்த மாதம் 27 மற்றும் 31ஆம் திகதிகளிலும் அடுத்த மாதம் 3 ஆம் திகதியும் விசேட தினங்களாக கருதி உத்தியோகபூர்வ வாக்காளர் அட்டைகள் விநியோகிக்கப்படும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

அத்துடன், வீடுகளுக்கே சென்று உத்தியோகபூர்வ வாக்காளர் அட்டைகளை விநியோகிக்கும் நடவடிக்கைகள் அடுத்த மாதம் 7ஆம் திகதியுடன் நிறைவு செய்யப்படும் எனவும் அறிவிக்கப்பட்டுள்ளது.

## இரகசியம் பரகசியம்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

ஆக, சீனக் கப்பல் ஒன்று – அதுவும் பாய்மர பயிற்சிக் கப்பல் ஒன்று – கொழும்பு வந்து திரும்பியமையைத் தவிர, வேறு சீன தரப்புடன் ஊடாட்டம் எதையும் அவர் வெளிப்படுத்தவில்லை. அமைதி காக்கின்றார்.

இதே நேரம் சீன ஆய்வுக் கப்பல்கள் இலங்கைக் கடற் பிராந்தியத்துக்குள் வருவதற்கு இடமளிக்காமல், அத்தகைய கப்பல்களுக்கு அனுமதி அளிக்காத முடிவை முன்னைய ரணில் அரசு எடுத்திருந்தது. அந்தத் தடைக்கான காலகட்டம் இவ்வாண்டு இறுதியில் முடிகின்றது. அந்த விடயம் தொடர்பில் அதன் பின்னர் என்ன செய்வது என்பது குறித்து ஜனாதிபதி அநுரகுமார திஸநாயக்க ஒரு தீர்மானத்தை எடுக்கும் போது சீனா தொடர்பிலான அவரது நிலைப்பாடு தெளிவாகும் என இந்தியா மற்றும் அமெரிக்கா போன்ற சர்வதேச தரப்புகள் காத்திருக்கின்றன எனக் கூறப்படுகின்றது.

சீனாவுடனான தனது அரசின் ஊடாட்டம் மூலம் சர்வதேச உறவு நிலை தொடர்பில் சில தீர்மானங்களை இலங்கையின் புதிய ஜனாதிபதி முன்னெடுக்க வேண்டியவராக இருக்கின்றார். அதுதான் களநிலைவரம் ஆகும்.

---

## யாழ்.இளைஞர்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

செய்த நபர் நீதிமன்ற உத்தரவில் விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளார்.

யாழ்ப்பாணத்தை சேர்ந்த இளைஞரை வெளிநாடு அனுப்பி வைப்பதாகக் கூறி 80 இலட்ச ரூபாவைப் பெற்றுக்கொண்டு, இளைஞரை வெளிநாட்டுக்கு அனுப்பி வைக்காத நிலையில், மேற்படி இளைஞர் மாவட்ட குற்றத் தடுப்புப் பிரிவிடம் முறைப்பாடு செய்திருந்தார்.

முறைப்பாட்டின் பிரகாரம் விசாரணைகளை முன்னெடுத்த பொலிஸார், பணத்தைப் பெற்றுக்கொண்டவரைக் கைது செய்து, விசாரணைகளின் பின்னர் நேற்று முன்தினம் செவ்வாய்க்கிழமை ஊர்காவற்றுறை நீதிவான் நீதிமன்றத்தில் முற்படுத்தியபோது, சந்தேகநபரை விளக்கமறியலில் வைக்குமாறு நீதிவான் உத்தரவிட்டுள்ளார்.

## சிவராம் கொலை...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

'ஊடகவியலாளர் தராகி சிவராமின் கொலை வழக்கு தொடர்பில் உங்களிடம் விசாரணைகள் மேற்கொள்ளப்படலாம் என ஊடகங்களில் செய்திகள் வெளியாகியுள்ளன. அது தொடர்பில் உங்களுடைய கருத்து என்ன?' என்று ஊடகவியலாளர்கள் எழுப்பிய கேள்விக்குப் பதிலளிக்கும்போதே சித்தார்த்தன் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

"சிவராமினுடைய கொலையானது 20 வருடங்களுக்கு முன்னர் இடம்பெற்றது. அது சம்பந்தமாக சிலர் கைது செய்யப்பட்டனர். உயர் நீதிமன்றத்தில் வழக்கு நடைபெற்று அந்த வழக்கிலிருந்து அவர்கள் முழுமையாக விடுதலை செய்யப்பட்டிருக்கிறார்கள். அதனுடைய அர்த்தம் இனிமேல் அந்த வழக்கை விசாரிக்க முடியாது என்பதாகும்.

நீதிமன்றத்தில் வழக்கு நிலுவையில் இருந்தபோதுகூட என்னிடம் விசாரணைகள் எதுவும் மேற்கொள்ளப்படவில்லை. அந்தக் கொலைக்கும் புளொட்டுக்கும் எந்தவிதத் தொடர்பும் இல்லை என்பதும், வேறு நபர்களே அந்தக் கொலையோடு சம்பந்தப்பட்டவர்கள் என்பதும் விசாரணையில் ஈடுபட்ட பொலிஸாருக்கு மிகத் தெளிவாகத் தெரியும்.

அது தொடர்பிள் அரசும் இப்போது அது பற்றி கூறியிருப்பது அரசியல் நோக்கம் கொண்டதாகவே கருதுகின்றேன். ஜே.வி.பியினரும் வடக்கு, கிழக்கிலே போட்டியிடுகின்றார்கள். தங்கள் அரசியல் நலன்களுக்காகவே இந்த வழக்குகள் அவர்கள் பற்றி பேசியிருக்கின்றார்கள். அதுபோல ஏனைய தமிழ்க் கட்சிகளும் தங்கள் அரசியல் நோக்கத்துக்காகவே தராகி சிவராமையும் எங்களையும் தொடர்புபடுத்தி பேசிக் கொண்டிருக்கின்றன.

தராகி சிவராம் கொலை வழக்கை மீள விசாரிப்பது தொடர்பில் அரசு தெரிவித்த கருத்தை நான் ஒரு விடயமாகவே கருதவில்லை.

கடந்த காலங்களிலே எத்தனையோ கொலைகள் இடம்பெற்றிருக்கின்றன. அது சம்பந்தமாக எந்தவிதமான நடவடிக்கைகளும் இதுவரை எடுக்கப்படவில்லை. தராகி சிவராம் கொலை வழக்குத்தான் மீள விசாரணைக்கு எடுக்கப்படவுள்ளது என்று சொல்லப்படுகின்றது.

மிகத் தெளிவாகத் தெரிகின்றது ஜனநாயகத் தமிழ்த் தேசியக் கூட்டணிக்கு மக்கள் மத்தியில் ஆதரவு பெறுகின்றது. அதனைப் பார்த்து அரசு உட்பட அனைவருமே பயமடைந்துதான் தராகி சிவராம் கொலை வழக்கையும் புளொட்டையும் தொடர்புபடுத்திக் கருத்தைச் சொல்லி வருகின்றார்கள்." – என்றார்.

# ஜே.வி.பியினரும் மதுபானசாலைகளை பெற்றார்களா?

## கீதநாத் சந்தேகம்




(எஸ்.நிதர்ஷன்)

கடந்த ஆட்சிக் காலத்தில் ஜே.வி.பியினரும் மதுபான சாலைகளைப் பெற்றார்களா என்ற சந்தேகம் எழுந்துள்ளது என்று ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் யாழ்ப்பாணம் மாவட்ட வட்பாளர் கீதநாத் காசிலிங்கம் குற்றஞ்சாட்டினார்.

யாழ். ஊடக அமையத்தில் நேற்று புதன்கிழமை மாலை நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பிலேயே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

"கடந்த ஆட்சிக் காலத்தில் பெறப்பட்டமதுபானசாலைகள்தொடர்பானவிபரங்களை ஜே.வி.பியின் தலைவர் அநுர குமார திஸாநாயக்க வெளியிடுவேன் எனத் தெரிவித்திருந்தார்.

தற்போது சில வாரங்களுக்கு முன்னர் ஊடக சந்திப்பை நடத்திய அக் கட்சியின் பிரமுகர் வசந்த சமரசிங்க மதுபானசாலைகளைப்பெற்றவர்கள்மற்றும்சிபாரிசு செய்தவர்களின்விபரங்களை வெளியிடப்போவதாகச் சொன்னார்.

ஆனால், மூன்று வாரங்கள் கடந்தும் இதுவரை அந்தப் பட்டியல் வெளியிடப்படவில்லை. இதன்மூலம் ஜே.வி.பியினரும் மதுபான சாலை அனுமதிப் பத்திரங்களைப் பெற்றார்களா என்ற சந்தேகம் எழுந்துள்ளது.

நான் மஹிந்த ராஜபக்ஷவுடன் 15 வருடங்களாக இணைந்து வேலை செய்கின்றேன். இதுவரை மதுபான சாலை அனுமதிப் பத்திரமோ, மதுபானப் போத்தலையோ நான் பெற்றதில்லை. எவருக்கும் பெற்றுக்கொடுத்ததும் இல்லை." – என்றார்.






# வலது கை விரலில் அடையாளம் வர்த்தமானி அறிவித்தல் வெளியீடு

எதிர்வரும் 26 ஆம் திகதி எல்பிட்டிய பிரதேசசபை தேர்தல் நடைபெறவுள்ள நிலையில், தேர்தல் ஆணைக்குழு அதி விசேட வர்த்தமானி அறிவித்தல் ஒன்றை வெளியிட்டுள்ளது.

கடந்த ஜனாதிபதித் தேர்தலின் போது வாக்காளர்கள் வாக்களித்ததை உறுதிப்படுத்துவதற்காக இடது கை சிறு விரலில் அடையாளப்படுத்தப்பட்டது.

எனினும் அந்தக் குறியீடு இன்னும் அந்த விரலில் உள்ளமையினால் உள்ளூர் அதிகார சபைகள் தேர்தல்கள் கட்டளைச் சட்டத்தின் (262 ஆம் அத்தியாயம்) 53அ (3) ஆம் பிரிவின் பிரகாரம், 26ஆம் திகதி நடைபெறவுள்ள எல்பிட்டிய பிரதேச சபைத் தேர்தலின் போது வாக்காளரின் இடது கைப் பெருவிரலில் அடையாளமிடப்படும்.

வாக்காளரின் இடது கையில் பெருவிரல் இல்லாதிருக்கும் பட்சத்தில், அவரது வலது கையில் உள்ள வேறேதெனுமொரு விரலில் அடையாளமிடப்படும் என தேர்தல் ஆணைக்குழு அறிவித்துள்ளது.

# ஸ்ரீலங்கன் எயர்லைன்ஸை தனியார் மயப்படுத்தும் திட்டத்தினை கைவிடத் தீர்மானித்துள்ளது அரசு




ஸ்ரீலங்கன் எயர்லைன்ஸை தனியார் மயப்படுத்தும் திட்டத்தை தற்போதைய அரசாங்கம் கைவிட தீர்மானித்துள்ளதாக நிறுவனத்தின் புதிய தலைவர் சரத் கனேகொட தெரிவித்துள்ளார்.

அதிக இலாபம் ஈட்டும் விமான சேவையாக ஸ்ரீலங்கன் எயர்லைன்ஸை மாற்றுவதற்கு தேவையான மறுசீரமைப்புகள் மேற்கொள்ளப்படும் என அவர் மேலும் குறிப்பிட்டார்.

ரி.ரி.ஜி. ஏசியாவிற்கு வழங்கியுள்ள நேர்காணலில் அவர் இதனைக் குறிப்பிட்டுள்ளார். அவர் மேலும் தெரிவிக்கையில், "நாட்டின் சுற்றுலாத்துறையின் வளர்ச்சிக்கு ஸ்ரீலங்கன் எயார்லைன்ஸ் மிக முக்கியமான காரணிகளில் ஒன்றாகும்.

இந்த நாட்டிற்கு வரும் சுற்றுலாப் பயணிகளில் 50 வீதமானோர் ஸ்ரீலங்கன் விமான சேவையை பயன்படுத்தி வருகின்றனர்.

2030 ஆம் ஆண்டுக்குள் 5 மில்லியன் சுற்றுலாப் பயணிகளை இலங்கைக்கு அழைத்து வரும் வேலைத் திட்டத்திற்காக, விமான சேவையை விற்பனை செய்வதை நிறுத்திவிட்டு, இந்த விமான சேவையை மறுசீரமைக்க திட்டமிடப்பட்டுள்ளது." – என்றார்.

# அர்ஜுன் அலோசியஸின் பிணை மனு நிராகரிப்பு



3.5 பில்லியன் ரூபா வற் வரியைச் செலுத்தத் தவறிய வழக்கில் 6 மாத சிறைத்தண்டனை விதிக்கப்பட்டுள்ள டபிள்யூ.எம்.மெண்டிஸ் நிறுவனத்தின் பணிப்பாளர் அர்ஜுன் அலோசியஸ் உள்ளிட்ட இருவரை விடுவிக்குமாறு முன்வைக்கப்பட்ட பிணை மனு கோரிக்கையைக் கொழும்பு நீதவான் நீதிமன்றம் நிராகரித்துள்ளது.

பிரதிவாதிகள் சார்பில் முன்னிலையான ஜனாதிபதி சட்டத்தரணி ரசிக் சரூக், நீதிமன்றில் சமர்ப்பணங்களை முன்வைத்து, பிரதிவாதிகளுக்கு எதிரான வழக்கு தற்போது குற்றவியல் வழக்காக மாறியுள்ளதால் அவர்களைப் பிணையில் விடுவிக்குமாறு கோரிக்கை விடுத்திருந்தார்.

எனினும், பிரதிவாதிகளுக்கு மாற்றுத் தண்டனை விதிக்கப்பட்டுள்ளதால் அது குற்றவியல் குற்றமாக விசாரிக்கப்படமாட்டாது என்பதால் பிணை கோரிக்கை நிராகரிக்கப்படுவதாகவும் மேலதிக நீதவான் அறிவித்துள்ளார்.

# நாட்டின் பல பகுதிகளில் தொடரும் கடும்மழை

நாட்டின் பல பகுதிகளில் தொடர்ந்தும் மழையுடனான வானிலை நிலவக்கூடுமென வளிமண்டலவியல் திணைக்களம் எதிர்வு கூறியுள்ளது.

இதன்படி, வட மாகாணத்தின் சில இடங்களில் 50 மில்லிமீற்றரிலும் அதிக மழைவீழ்ச்சி பதிவாகக்கூடும் என அந்த திணைக்களம் எதிர்வு கூறியுள்ளது.

அத்துடன், மேல், சப்ரகமுவ, ஊவா மற்றும் வடமேல் மாகாணங்களிலும், காலி, மாத்தறை, அம்பாறை, மட்டக்களப்பு, கண்டி மற்றும் நுவரெலியா ஆகிய மாவட்டங்களிலும் மழை அல்லது இடியுடன் கூடிய மழை பெய்யக்கூடுமென அறிவிக்கப்பட்டுள்ளது.



இடியுடன் கூடிய மழை பெய்யும் சந்தர்ப்பங்களில் ஏற்படும் ஆபத்துகளைத் தவிர்க்கும் வகையில் தேவையான பாதுகாப்பு நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறும் வளிமண்டலவியல் திணைக்களம் வேண்டுகோள் விடுத்துள்ளது.

# அனைத்து ஓய்வூதியதாரர்களுக்கும் 3,000 ரூபா இடைக்கால கொடுப்பனவு

மூவாயிரம் ரூபா மாதாந்த இடைக்கால கொடுப்பனவு அனைத்து ஓய்வூதியதாரர்களின் கணக்குகளிலும் நேற்று வைப்பிலிடப்பட்டது.

எதிர்வரும் நாளை முதல் தபால் அலுவலகங்கள் மற்றும் உப தபால் அலுவலகங்கள் ஊடாக பணத்தை பெற்றுக் கொள்ள முடியும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

ஓய்வூதியதாரர்களுக்கான உத்தேச மாதாந்த இடைக்கால கொடுப்பனவான 3,000 ரூபா வழங்கப்படாமை தொடர்பில் ஆராய்ந்த ஜனாதிபதி அனுரகுமார திஸநாயக்க, அதற்கான பணத்தை திறைசேரியிலிருந்து வழங்குமாறு அண்மையில் ஆலோசனை வழங்கியிருந்தார்.

அதற்கிணங்க, தேவையான நிதி திறைசேரியிலிருந்து ஓய்வூதிய திணைக்களத்திற்கு வழங்கப்பட்டுள்ளதுடன், நேற்று முதல் ஓய்வூதியதாரர்களின் வங்கிக் கணக்குகளில் பணத்தை வைப்பிலிட ஓய்வூதிய திணைக்களம் நடவடிக்கை எடுத்தது.

அனைத்து ஓய்வூதியதாரர்களுக்கும் மாதாந்த இடைக்கால கொடுப்பனவாக 3,000 ரூபாவை வழங்குவதற்கு கடந்த ஆகஸ்ட் 24 ஆம் திகதியிடப்பட்ட பொது நிர்வாக சுற்றறிக்கை வெளியிடப்பட்ட போதிலும் அதற்கான எந்த ஏற்பாடும் செய்யப்படவில்லை.

கடந்த 14ஆம் திகதி நடைபெற்ற அமைச்சரவை கூட்டத்தில் எடுக்கப்பட்ட தீர்மானத்தின் பிரகாரம் 679,960 ஓய்வூதியதாரர்களுக்காக இந்த இடைக்கால கொடுப்பனவு வழங்கப்படுகின்றது.

# நமது கருத்து

உலகத் தமிழர்களின் உறவுப்பாலம்

259, கோவில் வீதி, நல்லூர், யாழ்ப்பாணம்.
தொலைபேசி :- 021 222 3570
மின்னஞ்சல்:-murasunews2023@gmail.com


## ஐ.தே.கவின் அவல நிலைமை

இலங்கையின் பழமையான கட்சிகளில் ஒன்று ஐக்கிய தேசிய கட்சி. சுதந்திர இலங்கையில் முதலாவது அரசை அமைத்தது அதுதான்.

அன்று தொட்டு இந்த 77 ஆண்டு காலத்தில் மாறி மாறி ஆட்சி அமைத்த பிரதான கட்சிகளில் ஒன்று அது.

இப்போது 'கழுதை தேய்ந்து கட்டெறும்பான கதையாக' - 'உலக்கை தேய்ந்து உளிப்பிடியான நிலையில்' - அக்கட்சி இருக்கின்றது.

கடந்த பொதுத் தேர்தலில் கூண்டோடு தூக்கி அரசியல் குப்பைக்கூடைக்குள் தூக்கி வீசப்பட்ட அக்கட்சிக்கு அச்சமயம் ஜனாதிபதியாக இருந்த கோட்டாபய ராஜபக்ஷ நாட்டை விட்டு ஓடித் தப்பும் நிலைமை வந்தபோது அதிர்ஷ்டம் கிட்டியது. வரப் பிரசாதமாக வந்து வாய்த்தது வாய்ப்பு.

ஐக்கிய தேசியக் கட்சியின் தலைவர் ரணில் விக்கிரமசிங்க பின் கதவால் ஜனாதிபதியாக வரும் அதிர்ஷ்ட சந்தர்ப்பம் வந்தது.

இலங்கையினுடைய நிறைவேற்றதிகார ஜனாதிபதிப் பதவியை வைத்துக்கொண்டு கூட அக்கட்சியை அதன் தலைவரினால் மீளக் கட்டியெழுப்ப முடியவில்லை என்பதுதான் அக்கட்சியின் துரதிஷ்டமாகும்.

இப்போதைய பொதுத் தேர்தலில் அக்கட்சியின் மூத்த தலைவர்கள் எவரும் போட்டியிடவில்லை என்பது சுட்டிக் காட்டப்படுகின்றது.

டி.எஸ்.சேனநாயக்கா ஐக்கிய தேசியக் கட்சியை உருவாக்கியதன் பின்னர் அக்கட்சி முதல் தடவையாக வரலாற்றில் தேர்தலை கண்டு பின்வாங்கிச் சுருளும் நிலைமை ஏற்பட்டிருக்கின்றது.

அக்கட்சியின் தலைவர் ரணில் விக்கிரமசிங்க. பிரதித் தலைவர் முன்னாள் அமைச்சர் அகில விராஜ் காரிய வசம். பொதுச் செயலாளர் பாலித ரங்கே பண்டார. இவர்கள் எவருமே இந்தப் பொதுத் தேர்தலில் போட்டியிடவே இல்லை.

ஆக, கட்சியின் நிர்வாகச் செயலாளர் ரவி கருணநாயக்க மட்டும் தேசிய பட்டியலில் தமது பெயரைச் சேர்த்துள்ளார். மற்றும்படி கட்சியின் சார்பில் கற்றுக் குட்டிகளே களத்தில் இறங்கி உள்ளன.

அதிர்ஷ்டவசமாக ஜனாதிபதி பதவி கிட்டியும் கூட, கட்சியை மீண்டும் நிலைநிறுத்த முடியாத துரதிர்ஷ்ட நிலைக்கு ரணில் விக்கிரமசிங்க தள்ளப்பட்டிருக்கின்றார். அதற்கு காரணம் என்ன?

தான் ஜனாதிபதியாகத் தொடர்ந்து பதவியில் நீடிக்க வேண்டும் என்ற ஒரே சுயநல நோக்கோடு மட்டும் விடயங்களை ரணில் விக்கிரமசிங்க கையாண்டமையால்தான் அவரது கட்சி மீண்டும் நடுவீதிக்கு வந்திருக்கின்றது.

அவர் ஜனாதிபதியாக இருக்கின்ற போது பொது தேர்தலை நடத்தியிருந்தால் அவரது கட்சிக்கு குறிப்பிட்டு கூறக் கூடிய அளவாவது நாடாளுமன்ற ஆசனம் கிட்டி இருக்கும்.

ஆனால், அதையெல்லாம் செய்ய இடம் அளிக்காமல் தாம் ஜனாதிபதியாக பதவியில் நீடிக்க வேண்டும் என்ற ஒரு விடயத்தை மட்டும் இலக்காக வைத்துக் கொண்டு ரணில் விக்கிரமசிங்க காரிய மாற்றியமையால் இன்று அக் கட்சி காணாமல் போகும் நிலைக்கு வந்திருக்கின்றது.

ஐக்கிய தேசியக் கட்சியின் சிரேஷ்ட உறுப்பினர்கள் மட்டுமல்லர், ரணில் விக்கிரமசிங்கவுக்கு ஜனாதிபதி பதவியை வாரி வழங்கி, இரண்டரை ஆண்டுகள் அவர பதவியில் நீடிப்பதற்கு நாடாளுமன்றப் பலத்தைப் பின்புலமாகக் கொடுத்து நின்ற மொட்டுக் கட்சியின் தலைவர் பஸில் ராஜபக்ஷ கூட முற் கூட்டியே நாடாளுமன்றத் தேர்தலை நடத்துவதன் மூலம் ஓரளவுக்கு நாடாளுமன்றத்தை மீளக் கட்டுப்பாட்டில் வைத்துக் கொண்டு பின்னர் ஜனாதிபதி தேர்தலுக்கு போகலாம் என்று ஆலோசனை கூறினார்.

'கெடுகுடி சொற் கேளாது' என்பர். அதுதான் ரணில் விக்கிரமசிங்க விடயத்திலும் நடந்தது.

இப்போது தானும் ஜனாதிபதி தேர்தலில் தோற்று, தனது கட்சியும் பொது தேர்தலில் மீண்டெழ முடியாத பின்னடைவில் கொண்டு போய் கைவிட்டு இருக்கின்றார் அவர்.

இந்தப் பின்புலத்தில் தமது அரசியல் நிலைப்பாடு தொடர்பில் இன்று ரணில் விக்கிரமசிங்க அறிக்கை ஒன்றை வெளியிட இருக்கின்றார். அதில் தமது கட்சியை மீள உயிர்ப்பிப்பது பற்றி ஏதேனும் சூசகம் கூறுவாரோ தெரியவில்லை. பார்ப்போம்.

# 3 விமானங்களுக்கு குண்டு மிரட்டல்: சத்தீஸ்கரைச் சேர்ந்த சிறுவன் கைது!



மூன்று விமானங்களுக்கு வெடிகுண்டு மிரட்டல் விடுத்த சத்தீஸ்கரைச் சேர்ந்த சிறுவனை மும்பை பொலிஸார் கைது செய்தனர். நண்பன் பெயரில் போலி கணக்கு தொடங்கி அந்த சிறுவன் இந்த மிரட்டல்களை விடுத்துள்ளார் என தெரியவந்துள்ளது.

கடந்த திங்கள் கிழமை எக்ஸ் சமூகவலைதள கணக்கு ஒன்றில் மர்ம நபர் ஒருவர் வெவ்வேறு ஏர்லைன்களுக்கு சொந்தமான மூன்று விமானங்களுக்கு வெடிகுண்டு மிரட்டல் விடுத்து பதிவுகளை வெளியிட்டு வந்தார். அந்த பக்கத்தில் பலரும் மும்பை பொலிஸாரை “டேக்“ செய்து கவனத்துக்கு கொண்டு வந்தனர். இந்த மிரட்டல்கள் காரணமாக இரண்டு விமானங்கள் தாமதமாக புறப்பட்டன. அதில் மும்பையில் இருந்து நியூயோர்க் செல்லவிருந்த ஏர் இந்தியா விமானம் ஒன்று புதுடில்லிக்கு திருப்பிவிடப்பட்டது. மற்றொரு விமானம் ரத்து செய்யப்பட்டுள்ளது.

இந்த மிரட்டல்கள் குறித்து விசாரணையில் அந்த எக்ஸ் பக்கத்துக்கு சொந்தமான நபர் சத்தீஸ்கரில் இருப்பதை பொலிஸார் தெரிந்துகொண்டனர். இதன் அடிப்படையில் அங்கு விரைந்த பொலிஸார், சத்தீஸ்கரின் ராஜ்நந்த்கான் பகுதியைச் சேர்ந்த 17 வயது சிறுவன் ஒருவரை கைது செய்தனர். அவரிடம் நடத்திய விசாரணையில் அந்த சிறுவனுக்கும் அவருடைய நண்பனுக்கும் இடையே பணம் தொடர்பாக நடந்த தகராறில் ஆத்திரமடைந்த அந்த சிறுவன், தனது நண்பன் பெயர் மற்றும் புகைப்படத்துடன் போலி எக்ஸ் கணக்கு தொடங்கி, விமானங்களுக்கு வெடிகுண்டு மிரட்டல் விடுத்துள்ளார் என்பது தெரியவந்தது.

தன்னுடைய நண்பனை பொலிஸில் சிக்கவைக்கவே இவ்வாறு செய்ததாக அந்த சிறுவன் வாக்குமூலம் கொடுத்துள்ளார். கடந்த திங்கள் முதல் இதுவரை மொத்தம் 19 மிரட்டல் பதிவுகள் அந்த கணக்கில் இருந்து விடுக்கப்பட்டுள்ளன. இது தொடர்பாக வழக்குப் பதிவு செய்துள்ள போலீசார் சிறுவனின் தந்தைக்கும் சம்மன் அனுப்பியுள்ளனர். சிறுவனின் வயது மற்றும் எதிர்காலத்தை கருத்தில் கொண்டு அவருடைய பெயர் உள்ளிட்ட விவரங்களை பொலிஸார் வெளியிடவில்லை என்பது குறிப்பிடத்தக்கது.

# ரசிகர் கொலை வழக்கில் கைதான தர்ஷனின் பிணை மனு தள்ளுபடி!

ரசிகர் கொலை வழக்கில் கைதான கன்னட நடிகர் தர்ஷன், நடிகை பவித்ரா கவுடா ஆகியோரின் பிணை மனுக்களை பெங்களூர் நீதிமன்றம் தள்ளுபடி செய்து உத்தரவிட்டுள்ளது.

கன்னட முன்னணி நடிகர் தர்ஷன் (வயது 44) தனது காதலியும் நடிகையுமான பவித்ரா கவுடாவை சமூக வலைதளத்தில் சீண்டிய ரேணுகா சுவாமி (வயது 33) என்ற ரசிகரை கடத்தி கொலை செய்ததாக கடந்த ஜூன் 11 ஆம் திகதி கைது செய்யப்பட்டார். இவ்வழக்கில் பவித்ரா கவுடா, தர்ஷனின் மேலாளர் நாகராஜ் உட்பட 17 பேர் கைது செய்யப்பட்டு பெங்களூர் சிறையில் அடைக்கப்பட்டனர்.

இந்த வழக்கில் தர்ஷன், பவித்ரா கவுடா உள்ளிட்ட 17 பேருக்கு எதிராக 3991 பக்க குற்றப்பத்திரிகையை பொலிஸார் தாக்கல் செய்தனர். அதில் பவித்ரா கவுடா முதல் குற்றவாளியாகவும், தர்ஷன் குற்றவாளியாகவும் சேர்க்கப்பட்டனர்.

இந்நிலையில் தர்ஷனும் பவித்ரா கவுடாவும் பிணை வழங்கக்கோரி பெங்களூர் மாநகர 57 ஆவது குற்றவியல் நீதிமன்றத்தில் மனு தாக்கல் செய்தனர். நேற்று முன்தினம் அந்த வழக்கு விசாரணைக்கு வந்த போது தர்ஷன் தரப்பில் மூத்த வழக்கறிஞர் சி.வி.நாகேஷ் ஆஜராகி, இருவரின் உடல்நிலை மற்றும் தொழிலை கருத்தில் கொண்டு பிணை வழங்குமாறு வாதாடினார்.



அதனை ஏற்க மறுத்த நீதிமன்றம் இருவரின் பிணை மனுக்களையும் தள்ளுபடி செய்து உத்தரவிட்டது. இதையடுத்து தர்ஷன் தரப்பில் கர்நாடக உயர்நீதிமன்றத்தில் மேல்முறையீடு செய்ய இருப்பதாக வழக்கறிஞர் சி.வி.நாகேஷ் தெரிவித்தார்.

# சென்னையில் சிவப்பு எச்சரிக்கை வாபஸ்: பாடசாலை, கல்லூரிகள் இன்று இயங்கும்



சென்னை உள்ளிட்ட நான்கு மாவட்டங்களுக்கு விடுக்கப்பட்ட சிவப்பு எச்சரிக்கை திரும்பப் பெறப்படுவதாக சென்னை வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.

இதனையடுத்து, இன்று வியாழக்கிழமை பாடசாலை, கல்லூரிகள் வழக்கம்போல இயங்கும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

தென்மேற்கு வங்க கடல் பகுதிகளில் வலுப்பெற்றுள்ள காற்றழுத்த தாழ்வு மண்டலம், மேற்கு - வடமேற்கு திசையில் நகர்ந்து வடதமிழகம் - தெற்கு ஆந்திர கடற்கரை பகுதியில் புதுச்சேரிக்கும், நெல்லூருக்கும் இடையே சென்னைக்கு அருகில் இன்று வியாழக்கிழமை அதிகாலை கரையை கடக்கிறது.

இதனையொட்டி சென்னை, செங்கல்பட்டு, காஞ்சிபுரம், திருவள்ளூர் ஆகிய மாவட்டங்களுக்கு நேற்று அதிகன மழைக்கான சிவப்பு எச்சரிக்கை விடுக்கப்பட்டிருந்தது.



# பெய்ரூட்டின் புறநகர் பகுதிகளில் இஸ்ரேல் வான்வழித் தாக்குதல்!

லெபனானின் தலைநகரான பெய்ரூட்டின் தெற்கு புறநகர்ப் பகுதிகளில் இஸ்ரேல் வான்வழித் தாக்குதல்களை நடத்தியுள்ளது.

சுமார் ஒருவாரத்துக்குப் பின்னர் மீண்டும் தலைநகர் மீது தாக்குதல் நடத்தப்பட்டுள்ளது.

ஆயுதங்களைச் சேமித்து வைக்க ஹெஸ்புல்லா பயன்படுத்திய நிலத்தடி கிடங்கைத் தாக்கியதாக இஸ்ரேல் கூறுகிறது.

இதற்கிடையில், 50 எறிகணைகள் ஒரே இரவில் வடக்கு இஸ்ரேலின் சஃபெட் நகரத்தை நோக்கி ஏவப்பட்டதாக இஸ்ரேலிய பாதுகாப்புப் படைகள் தெரிவித்துள்ளன.

இஸ்ரேலிய வான்வழித் தாக்குதல்களில் நாட்டின் கிழக்கு மற்றும் தெற்கில் உள்ள மக்கள் கொல்லப்பட்டனர் என லெபனான் அதிகாரிகள் தெரிவித்ததை அடுத்து பெய்ரூட்டில் தாக்குதல்கள் நடத்தப்பட்டுள்ளன.

இதேவேளை, இஸ்ரேலின் தாக்குதல்களில் நாடளாவிய ரீதியில் 18 பேர் கொல்லப்பட்டுள்ளனர் என லெபனான் அதிகாரிகள் கூறுகின்றனர்.







## ஐஸ்லாந்தில் 30 ஆம் திகதி பொதுத் தேர்தல் இடம்பெறும்

ஐஸ்லாந்து பொதுத் தேர்தல் எதிர்வரும் 30 ஆம் திகதி இடம்பெறவுள்ளது.

இது தொடர்பான அறிவிப்பை அந்த நாட்டு ஜனாதிபதி உத்தியோகப்பூர்வமாக அறிவித்துள்ளார்.

3 கட்சிகளால் ஸ்தாபிக்கப்பட்ட கூட்டணி அரசாங்கம் கவிழ்ந்துள்ளதாக அந்த நாட்டுப் பிரதமர் கடந்த ஞாயிற்றுக்கிழமை அறிவித்திருந்தார்.

இந்த நிலையிலேயே ஐஸ்லாந்தின் பொதுத் தேர்தலுக்கான திகதி அறிவிக்கப்பட்டுள்ளது.

# துருக்கியில் நில அதிர்வு!



கிழக்கு துருக்கியில் நில அதிர்வு உணரப்பட்டுள்ளதாக வெளிநாட்டு ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.

மேற்படி நில அதிர்வு 6.0 மெக்னிடியூட் அளவில் பதிவாகியுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

இதேவேளை இந்த நில அதிர்வினால் ஏற்பட்ட சேத விபரங்கள் குறித்து எந்தத் தகவலும் வெளியிடப்படவில்லை.



# அகில இலங்கை ரீதியில் கூடைப்பந்தாட்டப் போட்டியில் 2ஆம் இடம் பெற்ற யாழ். திருக்குடும்ப கன்னியர் மட அணி

## யாழ்ப்பாணத்தில் நேற்று அமோக வரவேற்பு

(எஸ்.நிதர்ஷன்)

அகில இலங்கை ரீதியில் பாடசாலைகளுக்கு இடையே நடத்தப்பட்ட கூடைப்பந்தாட்டப் போட்டியில் 2ஆம் இடத்தைப் பெற்றுகொண்ட யாழ். திருக்குடும்ப கன்னியர் மட அணிக்கு யாழ்ப்பாணத்தில் அமோக வரவேற்பு அளிக்கப்பட்டது.

இலங்கை கல்வி அமைச்சின் ஏற்பாட்டில் அகில ரீதியில் நடத்தப்பட்ட பாடசாலை மாணவர்களுக்கு இடையேயான கூடைப் பந்தாட்டப் போட்டியில் 17 வயது பிரிவில் இறுதிப் போட்டியில் பம்பலப்பிட்டி திருக்குடும்ப கன்னியர் மடம் அணியுடன் மோதிய யாழ். திருக்குடும்ப கன்னியர் மடம் அணி 2ஆம் இடத்தைப் பெற்றுக்கொண்டது.

இதன் மூலம் வடக்கு மாகாண பாடசாலை ஒன்று 17 வயதுப் பிரிவில் முதன்முறையாக தேசிய ரீதியில் 2 ஆம் இடத்தைப் பெற்றுக்கொண்ட சம்பவமாக இது பதிவாகியது.

யாழ். திருக்குடும்ப கன்னியர் மட அணிக்கு தனுஷ் ராஜசோபனா பயிற்றுவிப்பாளராகக் கடமையாற்றுகின்றமை குறிப்பிடத்தக்கது.

இந்நிலையில், யாழ்.திருக்குடும்ப கன்னியர் மடம் அணிக்கான கௌரவிப்பு நிகழ்வு பாடசாலை சமூகத்தின் யாழ்ப்பாணத்தில் நேற்று இடம்பெற்றது.

பாடசாலை அதிபர் மரியசீலி மரியதாஸ் தலைமையில் நடைபெற்ற இந்த நிகழ்வில் சென்பற்றிக்ஸ் கல்லூரி அதிபர் அருட்தந்தை திருமகன், வடக்கு மாகாண உடற்கல்வி உதவிக் கல்விப் பணிப்பாளர் ராஜசீலன், யாழ்ப்பாணம் வலய உடற்கல்வி உதவிக் பணிப்பாளர் சாரங்கன் , ஆசிரிய ஆலோசகர் சசிகுமார், யாழ். மாவட்ட கூடைப்பந்தாட்ட சங்கத்தின் செயலாளர் யசிந்தன், யாழ்ப்பாணம் பிரதேச செயலக விளையாட்டு அமைச்சின் உத்தியோகத்தர், அருட்சகோதரி லுமினா உள்ளிட்ட பாடசாலை ஆசிரியர்கள், மாணவர்கள், கல்வி சாரா உத்தியோகத்தர்கள், பெற்றோர்கள் எனப் பலரும் கலந்துகொண்டிருந்தனர்.












# இலங்கை விவசாயத்துறையை ஒழுங்கமைப்பதற்கு நீண்டகால ஒருங்கிணைந்த வேலைத்திட்டம் தேவை

## ஜனாதிபதி அநுரகுமார திஸநாயக்க தெரிவிப்பு

முறையற்று இருக்கும் இலங்கையின் விவசாயத் தொழிலை ஒழுங்கமைக்கப்பட்ட நிலைக்குக் கொண்டு வருவதற்கு நீண்டகால ஒருங்கிணைந்த தேசிய வேலைத் திட்டமொன்று நடைமுறைப்படுத்தப்பட வேண்டுமென ஜனாதிபதி அநுரகுமார திஸநாயக்க தெரிவித்தார்.

ஜனாதிபதி செயலகத்தில் நேற்று இடம்பெற்ற விவசாயம், காணி, கால்நடை, நீர்ப்பாசனம், கடற்றொழில் மற்றும் நீரியல் வளங்கள் அமைச்சின் முன்னேற்ற மீளாய்வின் போதே ஜனாதிபதி இதனைக் குறிப்பிட்டார்.

அந்த அமைச்சுகளில் தற்போது நடைமுறைப்படுத்தப்படும் திட்டங்கள் குறித்து இதன்போது விரிவாக கலந்துரையாடப்பட்டது. இதுவரை மேற்கொள்ளப்பட்டுள்ள கிராமிய அபிவிருத்தி திட்டங்கள் தொடர்பில் ஆய்வு செய்த ஜனாதிபதி, அத்திட்டங்கள் ஓரளவு வெற்றியடைந்தாலும் அதன் மூலம் கிராமப்புற வறுமை எந்த அளவிற்கு தீர்க்கப்பட்டுள்ளது என்ற கேள்வியுள்ளதாகவும் தெரிவித்தார்.

எனவே எதிர்காலத்தில் கிராமிய வறுமையை ஒழிப்பதே கிராமிய அபிவிருத்தித் திட்டங்களின் பிரதான இலக்காக இருக்க வேண்டுமென ஜனாதிபதி அநுரகுமார திசாநாயக்க சுட்டிக்காட்டினார். முழு நாட்டையும் உள்ளடக்கிய வகையில் கிராமப்புற வறுமையை ஒழிக்க புதிய விரிவான வேலைத் திட்டத்தின் தேவையும் இதன்போது வலியுறுத்தப்பட்டது.

வறுமை என்பது பணப் பற்றாக்குறை மாத்திரமன்றி, சமூகத்தில் ஒரு பிரிவினரை ஓரங்கட்டுவது மற்றும் ஒரு பாரிய சமூகப் பேரழிவு என்றும் வலியுறுத்திய ஜனாதிபதி அநுரகுமார திஸநாயக்க, கிராமப்புற வறுமையை ஒழிப்பதற்கான இலக்குமயப்பட்ட வேலைத்திட்டத்தின் அவசியத்தையும் சுட்டிக்காட்டினார்.

இந்தக் கலந்துரையாடலில் ஜனாதிபதியின் செயலாளர் கலாநிதி நந்திக சனத் குமாநாயக்க, விவசாயம், காணி, கால்நடை, நீர்ப்பாசனம், கடற்றொழில் மற்றும் நீரியல் வளங்கள் அமைச்சின் செயலாளர் எம்.பி.என்.எம். விக்கிரமசிங்க, அமைச்சின் சிரேஷ்ட அதிகாரிகள், திட்டப் பணிப்பாளர்கள் உள்ளிட்ட அமைச்சின் பிரதிநிதிகள் கலந்து கொண்டனர்.



# தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் வன்னி மாவட்ட வேட்பாளர் அறிமுகம்



(கி.வசந்தன்)

நாடாளுமன்றத் தேர்தலுக்கான தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் வன்னி மாவட்ட வேட்பாளர் அறிமுகக் கூட்டம் வவுனியாவில் அமைந்துள்ள தனியார் விருந்தினர் விடுதியில் நேற்று புதன்கிழமை நடைபெற்றது.

தமிழ்த் தேசிய மக்கள் முன்னனியின் தலைவர் கஜேந்திரகுமார் பொன்னம்பலம் தலைமையில் நடைபெற்ற இந்த நிகழ்வில் கட்சியின் முக்கியஸ்தர்கள் மற்றும் ஆதரவாளர்கள் கலந்துகொண்டனர்.

தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் சார்பில் வன்னி மாவட்டத்தில் இம்முறை சு.தவபாலன் தலைமையில் எ.செல்வநாயகம், றொசின் பெர்னாண்டோ, தி.கிந்துஜன், தே.தினேஷ்குமார், பா.ஆனந்தபிரசாத், ச.ரகுமதி, சோ.பிரசாத், அ.றொணிடிமல் ஆகியோரைக் கொண்ட வேட்பாளர் குழு சைக்கிள் சின்னத்தில் களமிறங்கியுள்ளது.

# இளைஞர்களின் முயற்சியால் துப்பரவுப் பணி





(எஸ்.நிதர்ஷன்)

யாழ்ப்பாணம், ஆறுகால்மடத்தடியில் அமைந்துள்ள குருசுமதவடி வடிகால் அப்பகுதி இளைஞர்கள் மற்றும் பிரதேச சபை ஊழியர்களால் நேற்று புதன்கிழமை துப்புரவு செய்யப்பட்டது.

ஏலோன் ஓபீசியல் கிளப் போய்ஸ் கழக இளைஞர்களின் முயற்சியால் துப்பரவுப் பணிகள் முன்னெடுக்கப்பட்டன.

மழைநீர் தேங்கி நிற்பதால் ஏற்படக்கூடிய டெங்கு நோய் பரவல் மற்றும் சுகாதாரப் பாதிப்புக்களைத் தவிர்ப்பதற்கான முன்னேற்பாடாக இந்த நடவடிக்கை இடம்பெற்றது.

குருசுமதவடி வடிகாலின் நிலைமை தொடர்பாக யாழ். மாவட்ட அரச அதிபர் மருதலிங்கம் பிரதீபன் உள்ளிட்ட சுகாதாரத் தரப்பினர் நேற்றுக் காலை நேரடியாகப் பார்வையிட்டமை குறிப்பிடத்தக்கது.



# வீதி அபிவிருத்தி வேலைத்திட்டங்களை ஒழுங்குபடுத்தல் பொருளாதார இலக்குகளை அடைவதற்கு வழிவகுக்கும்

## ஜனாதிபதி அநுரகுமார திஸநாயக்க தெரிவிப்பு

வீதி அபிவிருத்தி வேலைத்திட்டங்களை ஒழுங்குபடுத்தல் மற்றும் செயற்திறனுடன் முன்னெடுத்தல் என்பன கிராமிய பொருளாதார இலக்குகளை அடைந்துகொள்ள வழிவகுக்கும் என ஜனாதிபதி அநுரகுமார திஸநாயக்க தெரிவித்தார்.

அதேபோல் கிராமிய அபிவிருத்தி செயற்பாடுகளை முன்னெடுக்கும்போது பெறுகைச் செயற்பாடுகள் ஒழுங்குமுறைக்கமைய முன்னெடுக்கப்பட வேண்டும் என்றும், ஒரு சிலருக்கு மாத்திரம் ஒப்பந்தங்கள் கிடைப்பதற்கு மாறாக பிரதேச மற்றும் கிராமிய மக்களுக்கு பலன்கள் கிடைக்கும் வகையில் மேற்படி வேலைத்திட்டங்களை தயாரிக்குமாறும் ஜனாதிபதி வலியுறுத்தினார்.

ஜனாதிபதி செயலகத்தில் நேற்று நடைபெற்ற போக்குவரத்து பெருந்தெருக்கள், துறைமுகங்கள் மற்றும் சிவில் விமான சேவைகள் அமைச்சின் முன்னேற்ற மீளாய்வுக் கலந்துரையாடலிலேயே ஜனாதிபதி இதனைத் தெரிவித்தார்.

போக்குவரத்து பெருந்தெருக்கள், துறைமுகங்கள் மற்றும் சிவில் விமான சேவைகள் அமைச்சினால் முன்னெடுக்கப்படும் வேலைத்திட்டங்கள் குறித்து இதன்போது விரிவாக மீளாய்வு செய்யப்பட்டதோடு, மத்திய அதிவேக வீதியின் மீரிகம – கடவத்தை பகுதியை நிர்மாணிப்பது குறித்தும் விசேட கவனம் செலுத்தப்பட்டது.

துறைமுகங்கள், விமான நிலையங்கள், பெருந்தெருக்களை அபிவிருத்தி செய்வது இலங்கையின் பொருளாதார அபிவிருத்திக்கு முக்கியமானதாகும் என்றும், அதற்கான வேலைத்திட்டங்களை ஒழுங்குமுறைக்கமைய திட்டமிடுவதால் தேசிய பொருளாதாரத்தை கட்டியெழுப்ப முடியும் என்றும் ஜனாதிபதி சுட்டிக்காட்டினார்.

ஏற்கனவே, ஆரம்பிக்கப்பட்டிருக்கும் பெருந்தெருக்கள் அபிவிருத்தி வேலைத்திட்டங்களின் போது சுற்றாடல் பாதிப்புகள், நிதி பாதிப்புகள், பொது மக்களுக்கு ஏற்படும் பாதிப்புகள் என்பவற்றை கருத்தில் கொண்டு பொது மக்களுக்கு ஏற்படக்கூடிய பாதகமான விளைவுகளை மட்டுப்படுத்தி வேலைத்திட்டங்களை துரிதப்படுத்த நடவடிக்கை எடுப்பது தொடர்பிலும் இங்கு அவதானம் செலுத்தப்பட்டது.

புகையிரத ஊழியர்கள் மற்றும் பொதுமக்களின் பாதுகாப்பு உறுதிப்படுத்தப்படும் வகையில் புகையிர தண்டவாள வேலைத்திட்டங்களை துரிதப்படுத்துமாறும் ஜனாதிபதி அதிகாரிகளுக்கு பணிப்புரை விடுத்தார்.

ஜனாதிபதியின் செயலாளர் கலாநிதி சனத் நந்திக குமாநாயக்க, போக்குவரத்து பெருந்தெருக்கள், துறைமுகங்கள் மற்றும் சிவில் விமான சேவைகள் அமைச்சின் செயலாளர் கே.டி.எஸ். ருவன்சந்திர உட்பட அமைச்சின் அதிகாரிகள் பலரும் இதன்போது கலந்துகொண்டிருந்தனர்.



# விருப்பு இலக்கங்கள் வெளியிடப்பட்டன

பொதுத் தேர்தலில் போட்டியிடும் வேட்பாளர்களின் விருப்பு இலக்கங்கள் நேற்று முற்பகல் வெளியிடப்பட்டன.

இம்முறை பொதுத் தேர்தலில் 8,352 வேட்பாளர்கள் களமிறங்குகின்றனர்.

இவர்களில் பெரும்பாலானோர் கொழும்பு மாவட்டத்திலேயே போட்டியிடுகின்றனர்.

கொழும்பு மாவட்டத்தில் 966 பேர் போட்டியிடுகின்றனர் என்பது குறிப்பிடத்தக்கது.





### இணையவழி நிதி மோசடி:

# 15 நாள்களுக்குள் மாத்திரம் 218 வெளிநாட்டவர்கள் கைது

இணையவழி நிதி மோசடி தொடர்பான குற்றச்சாட்டின் அடிப்படையில் கடந்த 15 நாள்களுக்குள் மாத்திரம் 218 வெளிநாட்டுப் பிரஜைகள் பாதுகாப்பு அதிகாரிகளினால் கைது செய்யப்பட்டுள்ளனர்.

இவ்வாறு இணையவழி நிதி மோசடி தொடர்பான கைதுகள் தொடர்ந்து இடம்பெற்று வரும் நிலையில், சிலாபம் இரணவில பிரதேசத்திலுள்ள விடுதியொன்றில் தங்கியிருந்த 10 வெளிநாட்டுப் பிரஜைகள் பொலிஸாரால் நேற்று முன்தினம் கைது செய்யப்பட்டுள்ளனர்.

இவ்வாறு கைது செய்யப்பட்டவர்களில் சீன பிரஜைகள் தவிர்ந்து, மலேசியர்கள், எத்தியோப்பியர்கள், கென்ய நாட்டவர்களும் அடங்குகின்றனர்.

சந்தேக நபர்கள் தங்கியிருந்த விடுதிக்குக் கடந்த ஒகஸ்ட் மாதம் முதலாம் திகதி முதல் மாதாந்தம் 19 லட்சம் ரூபா பணம் செலுத்தியுள்ளமை தெரியவந்துள்ளது.

இந்த சம்பவத்துடன் 2 இலங்கையர்களும் தொடர்புபட்டுள்ளதாகத் தகவல்கள் வெளியாகியுள்ளன.

இவர்கள் தொடர்பில் விசாரணைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளதாக சிலாபம் குற்றப் புலனாய்வு பிரிவினர் நீதிமன்றில் அறிவித்துள்ளனர்.

பொலிஸாரால் கைப்பற்றப்பட்ட கணினிகள் மற்றும் கையடக்கத் தொலைபேசிகள் மேலதிக சோதனைக்காக மொரட்டுவை பல்கலைக்கழகத்திற்கு அனுப்பிவைக்கப்பட்டுள்ளன.

அத்துடன், முன்வைக்கப்பட்ட உண்மைகளை பரிசீலித்த நீதிமன்றம் சந்தேக நபர்களை எதிர்வரும் 30 ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு உத்தரவிட்டுள்ளது.

இவ்வாறான சம்பவங்கள் தொடர்ந்து பதிவாகி வரும் நிலையில், இணையவழி நிதி மோசடி சம்பவங்கள் தொடர்பான சட்ட அமுலாக்கத்திற்கு தமது ஆதரவை வழங்குவதாகச் சீன தூதரகம் அறிவித்துள்ளது.

இதனிடையே, மியான்மார் மற்றும் தாய்லாந்தில் இயங்கும் சைபர் குற்ற முகாம்கள் போன்று, இலங்கையிலும் நிதி மோசடிகள் இடம்பெறுவதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

எனவே இவ்வாறான சம்பவங்கள் தொடர்பில் பொதுமக்கள் அவதானமாகச் செயற்படுமாறு பொலிஸ் ஊடகப் பேச்சாளர் பிரதி பொலிஸ் மா அதிபர் நிஹால் தல்துவ வேண்டுகோள் விடுத்துள்ளார்.



# குடிதண்ணீர் போத்தல்களை மீள பயன்படுத்த வேண்டாம்

### சுகாதாரப் பிரிவு எச்சரிக்கை

குடிதண்ணீர் அடைக்கப்படும் பிளாஸ்டிக் போத்தல்களை மீண்டும் பயன்படுத்துவதை தவிர்க்குமாறு சுகாதாரத்துறை மக்களை கேட்டுக்கொண்டுள்ளது.

சிலர் தண்ணீரை சேமித்து வைப்பதற்காக அந்தப் பிளாஸ்டிக் போத்தல்களை மீளப் பயன்படுத்துகின்றனர் என சுகாதார அமைச்சின் உணவு பாதுகாப்பு பிரிவு சுட்டிக்காட்டியுள்ளது.

பிளாஸ்டிக் போத்தல்களை மீளப் பயன்படுத்தும் போது, அவற்றின் உற்பத்தியில் பயன்படுத்தப்படும் மூலப்பொருள்களிலிருந்து சில இரசாயனங்கள் நீருடன் கலப்பதாக உணவு பாதுகாப்பு பிரிவு குறிப்பிட்டுள்ளது.

அவற்றில் சில இரசாயனங்கள் புற்றுநோயை உண்டாக்கும் என ஆய்வில் தெரியவந்துள்ளது.

இதனால், குடிதண்ணீர் நிரம்பிய பிளாஸ்டிக் போத்தல்களை மீளப் பயன்படுத்துவதை தவிர்க்குமாறு மக்கள் அறிவுறுத்தப்பட்டுள்ளனர்.

இது தொடர்பில் குடிதண்ணீரை போத்தல்களில் நிரப்பும் நிறுவனங்களின் அதிகாரிகளுக்கு தெளிவுபடுத்தப்பட்டுள்ளது.

குடிதண்ணீரைச் சேமித்து வைப்பதற்கு பயன்படுத்தப்படும் 19 லீட்டர் பிளாஸ்டிக் போத்தல்கள், சில வறண்ட வலயங்களில் தண்ணீரைச் சேமித்து வைக்கப் பயன்படுத்தப்படுவதாகவும் அவை ஆரோக்கியத்திற்கு பாதிப்பை ஏற்படுத்துவதாகவும் சுகாதார அமைச்சின் உணவுப் பாதுகாப்பு பிரிவு தெரிவித்துள்ளது.



# திருடிய 16 பவுண் நகைகளுடன் ஐந்து சந்தேகநபர்கள் சிக்கினர்

## சாவகச்சேரிப் பொலிஸாரின் அதிரடி நடவடிக்கை

(எஸ்.நிதர்ஷன்)

யாழ். தென்மராட்சியில் சாவகச்சேரிப் பொலிஸாரின் அதிரடி நடவடிக்கை மூலம் திருடப்பட்ட 25 இலட்சம் ரூபா பெறுமதியான 16 பவுண் தங்க நகைகள் மீட்கப்பட்டுள்ளதுடன் ஐந்து சந்தேகநபர்களும் கைது செய்யப்பட்டனர்.

கடந்த 10ஆம் திகதி சாவகச்சேரிப் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட கெருடாவில் பகுதியில் உள்ள வீடொன்றில் பகல் வேளையில் நுழைந்த கொள்ளையர்கள் வீட்டில் இருந்த 16 பவுண் நகைகள் மற்றும் தொலைபேசி ஆகியவற்றைத் திருடிவிட்டு தப்பித்திருந்தனர்.

கணவன் – மனைவி இருவரும் பணிக்குச் சென்று வீடு திரும்பிய நிலையிலேயே வீட்டில் திருட்டு இடம்பெற்றிருப்பது கண்டறியப்பட்டு அது தொடர்பில் பாதுகாப்புக் கமராவின் ஆதாரத்துடன் சாவகச்சேரிப் பொலிஸில் முறைப்பாடும் பதிவு செய்யப்பட்டிருந்தது.

இந்நிலையில் விரைந்து செயற்பட்ட பொலிஸார் நேற்று முன்தினம் செவ்வாய்க்கிழமை திருட்டுச் சந்தேகநபர்களான இரண்டு பெண்கள் மற்றும் நகைகளைப் பெற்றுக் கொண்ட வர்த்தகர்கள் இருவர் உட்பட ஐவரைக் கைது செய்தனர்.

அத்தோடு உருக்கப்பட்ட நிலையில் நகைகளும், திருட்டுச் சந்தேகநபர்களான பெண்களிடம் இருந்து நகை விற்ற 7 இலட்சம் ரூப பணமும் மற்றும் நகை விற்ற பணத்தில் இருந்து கொள்வனவு செய்யப்பட்ட ஆடம்பர மின் உபகரணங்களும் கைப்பற்றப்பட்டன.









# உலகளாவிய தேவைகளினை கருத்திற் கொண்டு கல்வி தொடர்பான திட்டங்கள் தயாரிக்கவேண்டும்

## ஜனாதிபதி அநுரகுமார தெரிவிப்பு

உலகளாவிய தேவைகளை கருத்திற் கொண்டு இலங்கையின் கல்வி தொடர்பான எதிர்காலத் திட்டங்கள் தயாரிக்கப்பட வேண்டும் என ஜனாதிபதி அநுரகுமார திஸநாயக்க தெரிவித்தார்.

கல்வி, விஞ்ஞானம் மற்றும் தொழில்நுட்ப அமைச்சுக்களின் முன்னேற்ற மீளாய்வு கலந்துரையாடலின்போதே ஜனாதிபதி இதனைக் கூறினார்.

மாணவர்களுக்கு ஏற்ற சூழலை உருவாக்கி சகல மாணவர்களுக்கும் கல்விக்கான பிரவேசத்தை வழங்கும் வகையில் பாடசாலைக் கல்வியை மறுசீரமைப்பது தொடர்பில் இதன்போது கவனம் செலுத்தப்பட்டது.

இலங்கையின் முன்னேற்றத்திற்கு உதவும் வகையில் மனித வளத்தை மேம்படுத்துவதற்காக மாணவர்களை அறிவாற்றல் நிறைந்தவர்களாக மாற்ற வேண்டும் எனவும் ஜனாதிபதி சுட்டிக்காட்டினார்.

அடுத்த 10 வருடங்களில் உலகிற்கு தேவையான மனித வளத்தை உருவாக்கும் பொறுப்பு கல்வி அதிகாரிகளை சார்ந்துள்ளது எனவும் அதற்கான பரந்த நோக்குடன் கல்வித் திட்டங்களைத் தயாரிக்க வேண்டியதன் அவசியம் எனவும் ஜனாதிபதி குறிப்பிட்டுள்ளார்.

பாடசாலைக் கல்வி நவீனமயமாக்கல், ஆசிரியர் கல்வி, இடைநிலைக் கல்வி, தொழில்நுட்பக் கல்வி, தகவல் தொழில்நுட்பக் கல்வியின் மேம்பாடு என்பன தொடர்பில் இக்கலந்துரையாடலில் கவனம் செலுத்தப்பட்டது.

இதற்கான திட்டங்களை விரைவாக நடைமுறைப்படுத்துமாறு ஜனாதிபதி மற்றும் பிரதமர் ஆகியோர் அதிகாரிகளுக்கு பணிப்புரை விடுத்தனர் என ஜனாதிபதி ஊடகப்பிரிவு தெரிவித்தது.

விஞ்ஞானம், கணிதம், தொழில்னுட்பம் ஆகிய உயர்தர பாடங்களை கற்பிக்கும் பாடசாலைகளின் எண்ணிக்கையை அதிகரிப்பது தொடர்பிலும் இதன்போது ஆராயப்பட்டுள்ளது.



# இன்றைய ராசி பலன்கள் -17.10.2024




இன்று நீங்கள் நம்பிக்கை உணர்வு மிகுந்து காணப்படுவீர்கள். உங்களிடம் ஸ்திரத்தன்மை காணப்படும். உங்களின் மாறுபாடற்ற மனநிலை காரணமாக நீங்கள் திறமையான முடிவுகளை எடுப்பீர்கள்.

உங்கள் பணிகளை எளிதாக மேற்கொள்ளவும் அதனை குறித்தநேரத்தில் முடிக்கவும் பணியிடச் சூழல் உகந்ததாக இருக்கும். உங்கள் மேலதிகாரிகளின் ஆதரவைப் பெற்று மகிழ்வீர்கள்.

உங்கள் துணையுடன் அன்பான உணர்வை பகிர்ந்து கொள்வீர்கள். இதன் மூலம் நல்ல புரிந்துணர்வு ஏற்படும்.

நிதிநிலைமை திருப்திகரமாக இருக்கும். சேமிக்கும் ஆற்றல் அதிகரிக்கும்.

ஆரோக்கியத்தில் எந்தக் குறைபாடும் காணப்படாது. உங்களின் மகிழ்ச்சியான மனநிலை உங்களை ஆரோக்கியமாக வைத்திருக்கும்.




இன்று கட்டுப்பாடற்ற சூழ்நிலை காணப்படும். மந்தமான தருணங்கள் காணப்படும். எனவே இருப்பதைக் கொண்டு மகிழ வேண்டும். எதிர்காலத்திற்காக செயல்பட முயல வேண்டும்.

பணிகளை குறித்தநேரத்தில் முடிக்க இயலாது. முறையாக திட்டமிடுவதன் மூலம் சிறப்பாக செயல்பட இயலும்.

திரைப்படம் பார்த்தல் மற்றும் வெளியிடங்களுக்கு செல்லுதல் போன்ற நிகழ்சிகள் மூலம் மகிழ்ச்சியான தருணங்களை பகிர்ந்து கொள்வீர்கள்.

இன்று பண இழப்பு காணப்படும். பயணத்தின்போது பணத்தை கவனமாகக் கையாள வேண்டும்.

பதட்டம் காரணமாக கால் வலி ஏற்பட வாய்ப்புள்ளது. யோகா பயிற்சியின் மூலம் ஆறுதல் பெறலாம்.




இன்று முன்னேற்றகரமான பலன்கள் காணப்படும். குறைந்த முயற்சியில் வெற்றி பெறுவீர்கள். சிறந்த செயல்திறம் மூலம் உங்கள் திறமைகளை நிரூபிப்பீர்கள். உங்கள் தன்னம்பிக்கை அதிகரிக்கும்.

பணி சம்பந்தமான புதிய வாய்ப்புகள் உருவாகலாம். அந்த வாய்ப்புகளை பயன்படுத்துவதன் மூலம் பணியில் முன்னேற்றம் காணலாம்.

உங்கள் துணையுடன் மகிழ்ச்சியான தருணங்களை பகிர்ந்து கொள்வீர்கள். உங்கள் குடும்ப வளர்ச்சி மற்றும் குடும்பத்தில் நடைபெறும் சுப நிகழ்ச்சி குறித்து ஆலோசிப்பீர்கள்.

பணவரவு மகிழ்சிகரமாக இருக்கும். உங்கள் வங்கியிருப்பு உயரும். அது உங்களுக்கு திருப்தியை அளிக்கும்.

உங்களின் மன உறுதி மற்றும் தைரியம் காரணமாக இன்று உங்களின் ஆரோக்கியம் சிறப்பாக இருக்கும்.




இன்று முன்னேற்றகரமான பலன்களைக் காண்பீர்கள்.இன்று புத்துணர்ச்சியுடனும் உறுதியுடனும் காணப்படுவீர்கள். புதிய முயற்சிகளில் பங்கு கொள்வது உங்களுக்கு லாபகரமாக அளிக்கும்.

உங்கள் திறமை காரணமாக பணிகளை குறித்த நேரத்தில் முடிப்பீர்கள். முறையாக திட்டமிடுவதன் மூலம் உங்கள் பணிகளை உற்சாகமாக செய்வீர்கள்.

உங்கள் துணையுடன் நட்பான உறவுமுறை கொள்வீர்கள். இதனால் உங்கள் துணையிடம் நல்ல புரிந்துணர்வு காணப்படும்.

இன்று போதிய பணம் காணப்படும். இன்று கணிசமான தொகை சேமிப்பீர்கள்.

உங்களிடம் காணப்படும் ஆற்றல் காரணமாக இன்று உங்கள் ஆரோக்கியம் சிறப்பாக இருக்கும்.




இன்று துடிப்பான நாளாக இருக்காது. ஆன்மீக பயணங்கள் உங்களுக்கு நல்ல பலனை அளிக்கும். பயணங்கள் மூலம் பலனுள்ள மாற்றங்கள் ஏற்படும்.

இன்று பணிச்சுமை அதிகமாக காணப்படும். இதனால் பணிகளை குறித்தநேரத்தில் முடிப்பது கடினம்.

குடும்ப பிரச்சினை காரணமாக உங்கள் துணையுடன் தவறான புரிந்துணர்வு காணப்படும். உங்கள் உறவின் சிக்கல்களை தீர்க்க உங்கள் துணையுடன் மனம் திறந்து பேச வேண்டும். இதன் மூலம் உறவில் நல்லிணக்கம் தக்க வைத்துக் கொள்ள முடியும்.

பணப்புழக்கம் குறைந்து காணப்படும். தேவையற்ற செலவுகள் கவலையை உண்டாக்கும்.

உங்கள் துணையின் ஆரோக்கியத்தில் கவனம் தேவை. இதற்காக நீங்கள் செலவு செய்ய வேண்டியிருக்கும்.




பொறுமையான அணுகுமுறையை பராமரிப்பதன் மூலம் நீங்கள் சாதகமான பலன்களை காணலாம். சில சௌகரியங்களை விட்டுக் கொடுக்க நேரலாம். வெற்றி காண முறையாக திட்டமிட வேண்டும்.

உங்கள் பணிகளை மேற்கொள்ளும்போது தவறுகள் நேர வாய்ப்புள்ளது. பனியின் போது நீங்கள் விழிப்புடன் கவனமாக இருக்க வேண்டும்.

உங்கள் துணையுடன் உணர்ச்சி வசப்படுவீர்கள். இதனால் இருவருக்கிடையே கருத்து வேறுபாடு ஏற்படும். சமநிலை அணுகுமுறை மேற்கொண்டு நல்ல புரிந்துணர்வை பராமரியுங்கள்.

அதிகரிக்கும் செலவுகள் கவலையை உண்டாக்கும். பணத்தை விவேகத்துடன் கையாள்வதன் மூலம் நிலைமையை சிறப்பாக சமாளிக்கலாம்.

பதட்டம் காரணமாக கால் வலி ஏற்பட வாய்ப்புள்ளது. தியானம் மேற்கொள்வதன் மூலம் அமைதி பெறலாம்.




இன்று முக்கிய முடிவுகள் எடுக்க உகந்த நாள். அவற்றின் மூலம் லாபகரமான பலன் கிடைக்கும். நீங்கள் இன்று நம்பிக்கை உணர்வுடன் காணப்படுவீர்கள்.

பணியில் உங்கள் செயல்திறன் அபாரமாக இருக்கும். உங்கள் பணிக்கு மேலதிகாரிகளின் பாராட்டைப் பெறுவீர்கள். இதனால் திருப்தியும் சாதித்த உணர்வும் உங்களிடம் காணப்படும்.

உங்கள் வீட்டில் நடக்கும் சுப நிகழ்ச்சி ஒன்றைப் பற்றி உங்கள் துணையுடன் மனம் திறந்து பேசுவீர்கள். உங்கள் துணையுடன் கொண்டாடி மகிழ்வீர்கள்.

பணப்புழக்கம் அதிகமாகக் காணப்படும். பணத்தை பயனுள்ள வகையில் செலவு செய்வீர்கள்.

இன்று சிறந்த ஆரோக்கியம் காணப்படும். ஆரோக்கியத்தில் எந்தக் குறைபாடும் இருக்காது.




இன்று காணப்படும் குழப்பமான சூழ்நிலை உங்களுக்கு வருத்தத்தை அளிக்கும். அத்தகைய சூழ்நிலையை கையாள்வது கடினம். பிரார்த்தனை மூலம் ஆறுதல் பெறலாம்.

இன்று அதிகப் பணிகள் காணப்படும். நீங்கள் பணியில் தவறுகள் செய்ய நேரலாம். உங்கள் பணிகளை திறம்பட செய்ய முறையாக திட்டமிட வேண்டும்.

உங்களின் உணர்ச்சி வசப்பட்ட மனநிலையை உங்கள் துணையிடம் வெளிப்படுத்துவீர்கள். இது உறவின் நல்லிணக்கத்தை பாதிக்கும். எதையும் லேசாக எடுத்துக் கொள்வதன் மூலம் நன்மை விளையும்.

நிதி நிலைமை மகிழ்ச்சிகரமாக இருக்காது.பண இழப்பு ஏற்பட வாய்ப்புள்ளதால் கவனமாக இருக்க வேண்டும்.

நீங்கள் தலைவலி மற்றும் சளித் தொல்லையால் அவதிப்பட நேரலாம். எரிச்சலூட்டும் உணர்சிகளைக் கையாள நீங்கள் அமைதியாக இருக்க வேண்டும்.

# இன்றைய ராசி பலன்கள் -17.10.2024




இன்று நீங்கள் பதட்டமான மன நிலையில் இருப்பீர்கள். இசை கேட்ப தன் மூலம் ஆறுதல் கிடைக்கும். விவாதம் செய்வதை தவிர்த்து நட்பான அணுகுமுறை மேற்கொள்ளுங்கள்.

கவனக்குறைவு காரணமாக பணி யில் தவறுகள் ஏற்பட வாய்ப்புள்ளது. உங்கள் பணிகளை சிறப்பாக செய்ய கவனமாக இருப்பது உதவியாக இருக்கும்.

உறவில் ஸ்திரத்தன்மை தக்க வைக்க உங்கள் துணையுடன் நட்பான அணுகுமுறை மேற்கொள்ள வேண்டும்.

பண இழப்பு ஏற்பட வாய்ப்புள்ளது. கூடுதல் செலவுகள் உங்களுக்கு வருத்தத்தை அளிக்கும்.

தூக்கமின்மை காரணமாக கால் வலி ஏற்பட வாய்ப் புள்ளது. பிரார்த்தனை மற்றும் தியானத்தில் ஈடுபடு வதன் மூலம் ஆரோக்கியமாக இருக்கலாம்.




இன்று உங்கள் விருப்பங்கள் நிறை வேறுவதற்கு சாதகமான நாள். இதன் மூலம் திருப்தி உண்டாகும். வெற்றி காண எளிய அணுகுமுறை மேற் கொள்ளுங்கள்.

உங்கள் பணியில் நீங்கள் திற மையாக செயல்படுவீர்கள்.இதனால் திருப்தி கிடைக்கும். உங்கள் மேலதிகாரிகளின் நன்மதிப்பை பெறுவீர்கள்.

உங்கள் நண்பர் இல்ல விழாவில் பங்கு கொள்ள பயணம் மேற்கொள்ளும் போது உங்கள் துணையுடன் அமைதியான தருணங்களை கழிப்பீர்கள்.

நிதிநிலைமை மகிழ்ச்சிகரமாக இருக்கும். கணிசமான தொகை காண அதிர்ஷ்டம் சாதகமாக இருக்கும்.

இன்று ஆரோக்கியம் சிறப்பாக இருக்கும். உங்களி டம் காணப்படும் நம்பிக்கை காரணமாக நீங்கள் சிறந்த ஆரோக்கியத்துடன் இருப்பீர்கள்.




உங்கள் வளர்ச்சியில் சில தடைகள் காணப்படும். என்றாலும் உறுதி மற்றும் சளைக்காத குணம் மூலம் வெற்றி காண்பீர்கள்.

எதிர்மறை விளைவுகள் மற்றும் எதிர்மறை எண்ணங்கள் சிறப்பாக பணியாற்ற தடையாக இருக்கும். சில கட்டுப்பாடுகள் சிறந்த பலன் காண தடையாக இருக்கும்.

கவனமற்ற பேச்சு காரணமாக உங்கள் துணையு டன் தவறான புரிந்துணர்வு காணப்படும்.உறவில் நல் லிணக்கம் காண நட்பான அணுகுமுறை மேற் கொள்ள வேண்டும்.

வரவும் செலவும் கலந்து காணப்படும். உங்கள் சேமிப்பை உயர்த்துவது கடினமாக உணர்வீர்கள்.

பாதுகாப்பின்மை உணர்வு காரணமாக நரம்பு பிரச்சினை ஏற்படலாம். அமைதியாக இருந்து பிரார்த் தனை மேற்கொள்ளவும்.




ன்று பயணம் காணப்படுகின்றது. இது புதியதொடர்புகள் கிடைக்க பயனுள்ள வாய்ப்பை உருவாக் கித் தரும்.

பணியிடத்தில் நன்மையான பலன்கள் கிடைக்கும். உங்கள் கடின உழைப்பிற்கு பாராட்டைப் பெறுவீர்கள்.

பயணத்தின்போது உங்கள் துணையுடன் மகிழ்ச்சியான தருணங்களை கொண்டாடி மகிழ் வீர்கள். இதனால் இருவரிடையே நல்ல புரிந்து ணர்வு ஏற்படும்.

பணப்புழக்கம் மகிழ்ச்சிகரமாக இருக்கும். என்றாலும் குடும்பத்திற்காக சிறிது பணம் செலவு செய்ய நேரும்.

ஆரோக்கியமான உணவு உட்கொள்வதன் மூலம் திடமாக இருக்கலாம். அசௌகரியத்தை சமாளிக்கலாம்.




